# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4
# முதலாந் தவணைப் பரீட்சை – 2016

## வணிகக்கல்வியும் கணக்கீடும் II

## தரம் - 11

சுட்டெண்:................................ நேரம் : 2 மணி

கவனிக்குக.

- முதலாவது வினா கட்டாயமானது.
- A பகுதியிலிருந்து 2 வினாவிற்கும் B பகுதியில் இருந்து 2 வினாவிற்கும் விடை தருக.
- மொத்தம் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

01. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து ஒன்று தொடக்கம் பத்து வரையான கேள்விகளுக்கு விடை தருக.

உதயாவும் குமாரும் பல்வேறு உற்சவங்களுக்காக மலர்கள் மற்றும்அது சார்ந்த ஏனைய சேவைகளை வழங்குவதற்காக வணிகமொன்றினை 2016 ஜனவரி 01 இல் ஆரம்பித்தனர். தமது வணிக்திற்கு தேவையான பூக்களை பூந்தோட்டம் வைத்திருக்கும் உற்பத்தியாளர்களிடமிருந்து மொத்தமாக கொள்வனவு செய்து பூக்களாகவும் பூ மாலையாகவும் விற்பனை செய்கின்றனர். மேலும் தமது வணிகத்தை "உதயகுமார்" என்ற பெயரில் பதிவு செய்துள்ளனர். அத்துடன் எழுத்து மூலமான ஒப்பந்தமும் காணப்படுகின்றது.

மேற்படி உதயகுமார் வணிகத்தை ஆரம்பிப்பதற்காக ரூபா 100,000 வீதம் உதயாவும் குமாரும் மூலதனப் பங்களிப்பு செய்துள்ளனர். மேலும் ரூபா 50,000 வங்கியிலிருந்தும் கடனாகப் பெற்றுள்ளனர். 2016 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| கொள்வனவு (மலர்கள்) | ரூபா 10,000 |
| வணிக நிலைய மாத வாடகை செலுத்தியது | ரூபா 3,000 |
| கடன் கொள்வனவு (மலர்கள்) | ரூபா 30,000 |
| உதவியாளர் சம்பளம் கொடுப்பனவு | ரூபா 2,000 |
| விற்பனை (மலர்கள்) | ரூபா 15,000 |
| கடன் விற்பனை (மலர்கள்) | ரூபா 40,000 |
| ஏனைய செலவுகளுக்கான கொடுப்பனவு | ரூபா 3,000 |

1) மேற்படி வியாபாரத்தின் இரு பிரதான நடவடிக்கைகளும் எவை?
2) இவ்வணிகம் எவ்வகையான வணிக அமைப்பாக பதிவு செய்யப்பட வேண்டும்?
3) இவ் வணிகம் எந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்?
4) எழுத்து மூலமான ஒப்பந்தத்தை மேற்கொள வேண்டும் என வலியுறுத்தும் சட்டம் எது?
5) இவ் வணிக அமைப்பில் காணப்படும் அனுகூலங்கள் இரண்டினைத் தருக?
6) மூலதனத்தையும் வங்கிக் கடனையும் பெற்ற பின்னர் இவ் வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாடு காணப்பட்ட விதத்தை தருக.
7) இவ் வணிகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய முதனமை ஏடுகளைத் தருக.
8) அவ் முதன்மை ஏடுகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களை குறிப்பிடுக.

9) 2016 ஜனவரி மாதத்துக்கான காசேட்டை தயாரித்து இறுதி காசு மீதியினக் கணிப்பிடுக.

10) கடன் கொள்வனவு கடன் விற்பனைக்குரிய இரட்டைப் பதிவை எழுதிக் காட்டுக.

(20 புள்ளிகள்)

## பகுதி – A வணிகக்கல்வி

**2 வினாக்களிற்கு மட்டும் விடை தருக.**

02. 1) பொதுவாக காணப்பக்கூடிய வணிக நோக்கங்களையும் துணை நோக்கங்களையும் குறிப்பிடுக.

2) வியாபாரத்தின் வகைளை பாய்ச்சல் கோட்டுப்படத்தில் வகைப்படுத்திக் காட்டுக.

3) சில்லறை வியாபாரத்திற்கும் , மொத்த வியாபார்திற்கும் இடையிலான வேறுபாடுகள் 4 தருக.

4) உலகிலுள்ள அனைத்து நாடுகளும் ஏனைய நாடுகளுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இதற்கான பிரதான காரணங்கள் 2 தருக.

5) உள்நாட்டு வணிகத்தில் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமாக விளைவுகள் 4 ருக.

(10 புள்ளிகள்)

03. 1) வணிக வங்கிகளினால் பேணப்படும் வங்கிக் கணக்குகள் எவை?

2) காசோலையில் குறுக்கு கோடிடலின் இரு முறைகளையும் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் இரு உதாரணம் தருக.

3) காப்புறுதி தத்துவங்களை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

4) பொருத்தமான போக்குவரத்த முறையொன்றைத் தெரிவு செய்யும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் 4 தருக.

5) தொடர்பாடற் செயன்முறையை வரைபடத்தின் மூலம் காட்டுக.

(10 புள்ளிகள்)

04. 1) முகாமைத்துவம் என்றால் என்ன?

2) முகாமைத்துவத்தின் நான்கு பிரதான செயன்முறைகள் எவை?

3) சந்தைப்படுத்தல் என்றால் என்ன?

4) சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகள் எவை?

5) நேரடி விநியோகம் என்றால் என்ன? உதாரணம் 1 தருக.

(10 புள்ளிகள்)

## பகுதி – B கணக்கீடு

05. சூர்யா வணிகத்தின் 01/01/2016 இல் காணப்பட்ட மீதிகள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| காசு | | 200,000 |
| கடன்பட்டோர் | - குணா | 25,000 |
| | - குமார் | 40,000 |
| மூலதனம் | | 180,000 |
| கடன் கொடுத்தோர் | - ரவி | 50,000 |
| | ரகு | 35,000 |

ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

01/03 உடன் காசிற்குகொள்வனவு ரூ 20 000

08 குணாவிடமிருந்து பெற்ற காசு ரூ 5 000

15 உடன் காசிற்கு விற்பனை ரூ 7 000

17 ரவிக்கு சென்மதியான தொகை 10% கழிவு நீக்கிய பின் செலுத்தப்பட்டது

18 செலுத்திய சம்பளம் ரூ 5 000

19 குமாரிடமிருந்து பெற்ற காசோலை ரூ 9 500. அனுமதித்த கழிவு ரூ 500

21 ரகுவிற்கு செலுத்திய காசு ரூ 19 000 கிடைத்த கழிவு ரூ 1 000

23 பெற்ற தரகு ரூ 10 000

25 உரிமையாளர் பற்று ரூ 5 000

28 குணாவிடமிருந்து வருமதியான மிகுதித் தொகைக்கு 5% கழிவு அனுமதிக்கப்பட்டு மிகுதி காசாக பெறப்பட்டது.

30 வாடகை செலுத்தியது ரூ 20 000

வேண்டப்படுவது.

31.01.2016 இல் முடிவடைந்த மாதத்திற்கான

1. கழிவு நிரலுடன் கூடிய காசுக் கணக்கு
2. உரிய பேரேட்டுக் கணக்குகள்

(10 புள்ளிகள்)

06. 1) கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளைக் கருத்திற்கொண்டு மதன் வணிகத்தின் 31/12/2015 இல் உள்ள பரீட்சை மீதியைத் தயாரிக்குக.

| | ரூபா |
|---|---|
| கடன்பட்டோர் | 20 000 |
| கடன்கொடுத்தொர் | 30 000 |
| மூலதனம் | 200 000 |
| சம்பளம் | 10 000 |
| பெற்ற வாடகை | 20 000 |
| மின்சாரம் | 4 000 |
| கட்டிடம் | 100 000 |
| தளபாடம் | 50 000 |
| பற்று | 5 000 |
| கொள்வனவு | 100 000 |
| விற்பனை | 250 000 |
| 10% வங்கிக்கடன் | 40 000 |
| நிலையான வைப்பு | 50 000 |
| விளம்பரம் | 2 000 |
| காசு | 20 000 |
| வங்கி | 179 00 |

2) “சுரேன்” வணிகத்தின் 31/03/2015 அன்று உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை சமப்படவில்லை.

அவ்வேறுபாடாகிய ரூ.10 400 தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. பின்னர் பின்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன.

1) காசு விற்பனை ரூ.9000 விற்பனை கணக்கில் ரூ.900 என பதியப்பட்டது.

2) பெற்ற வாடகை ரூ.10000 ஏடுகளில் இருமுறை பதியப்பட்டது.

3) விளம்பர கணக்கு மீதி ரூ.3500 பரீட்சை மீதிக்கு மாற்றப்படவில்லை.

4) வங்கிக்கடன் மீளச் செலுத்தியது ரூ.15000 காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது.

1. வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டு பதிவுகள்.
2. தொங்கல் கணக்கு (6 புள்ளிகள்)

07. 1) 31.01.2016 அன்று குணா வணிகத்தின் வங்கி கணக்கு ரூ.36000 ஆக இருந்தது. எனினும் அத்திகதியில் வங்கிக்கூற்றின் மீதியானது வேறொரு மீதியாக இருந்தது. வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு.

1) ஜனவரி மாதத்தில் வைப்புச் செய்த போதிலும் அம்மாதத்துடன் தேறாத காசோலைகள் ரூ.12000

2) ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ.8500

3) வங்கிக்கூற்றில் காணப்பட்ட பின்வரும் விடயங்கள் வணிகத்தின் வங்கிக் கணக்கில் காணப்படாதிருந்தன.

i. நிலையியற் கட்டளையினடிப்படையில் வங்கியின் மூலம் செலுத்திய காப்புறுதி தவணைக் கட்டணம் ரூ.6000

ii. கடன்பட்டோரால் வங்கியில் நேரடியாக வைப்பு செய்த தொகை ரூ.10000

iii. வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ.2000

iv. வங்கிக்கு நேரடியாக செலுத்தப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ.5000

வேண்டப்படுவது

1. வங்கிக் கணக்கைச் சீராக்குதல்.
2. சீராக்கப்பட்ட வங்கிக்கணக்கின் மீதியைப் பயன்படுத்தி வங்கிகணக்கிணக்க கூற்று.

(6 புள்ளிகள்)

2) 2016/01/15 அன்று ரூ.250 000 பெறுமதியுள்ள மோட்டார் வாகனம் வரையறுக்கப்பட்ட சரவணன் கம்பனியிடமிருந்து நிறுவன பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்டது.

வேண்டப்படுவது.

- மேற்கூறிய கொடுக்கல் வாங்கலை பொருத்தமான மூல ஏட்டில் பதிவு செய்க.

(02 புள்ளிகள்)

3) பரத் வணிகத்தின் 2015 ஆம் ஆண்டுக்குரிய தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 01.01.2015 இல் மூலதனம் | ரூ. 500 000 |
| ஆண்டிற்குரிய வருமானங்கள் | ரூ. 310 000 |
| ஆண்டிற்குரிய செலவினங்கள் | ரூ. 240 000 |
| வருடத்தின் இடப்பட்ட மேலதிக மூலதனம் | ரூ. 50 000 |
| வருடத்தில் உரிமையாளரின் எடுப்பனவு | ரூ. 15 000 |

வேண்டப்படுவது.

31/12/2015 இல் உரிமையாளரின் உரிமையைக் கணிப்பிடுக. (2 புள்ளிகள்)